


## 19.03.2025

### தலைப்புச்செய்திகள்

- **விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும்** சக விண்வெளி வீரர்களின் விடா முயற்சியையும், துணிச்சலையும், குடியரசுதலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் பாராட்டியுள்ளனர்.
- **நாட்டில் தீவிரவாத நடவடிக்கைகள் பெருமளவு** குறைந்துள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.
- **ககன்யான் பெண் ரோபோ பரிசோதனை விண்வெளி** திட்டம் இந்த ஆண்டு இறுதியில் செயல்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் மக்களவையில் கூறியுள்ளார்.
- **ஓய்வுபெற்ற காவல்துறை உதவி** ஆய்வாளர் கொலை தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.
- **ஸ்பெயின் சேலஞ்சர்ஸ் கோப்பை டென்னிஸ்** ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் சுமித் நாகல் - ஸ்பெயினின் லாமஸை இன்று எதிர்கொள்கிறார்.

### இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

**சுனிதா வில்லியம்ஸ்**

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் சக விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக புவி திரும்பியதற்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி, உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, போராட்ட உணர்வு போன்றவற்றின் மூலம் சுனிதா வில்லியம்ஸும் இதர விண்வெளி வீரர்களும் உலக மக்களுக்கு உத்வேகமாக திகழ்கிறார்கள் என்றும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

சுனிதா - பிரதமர்

விண்வெளி வீராங்கனை சுனிதாவில்லியம்ஸ் மற்றும் அவரது குழு வீரர்கள் பாதுகாப்பாக புவி திரும்ப அயராது முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தொடர் முயற்சியின் வலிமை என்ன என்பதை சுனிதாவில்லியம்ஸ் மற்றும் அவரது விண்வெளி வீரர்கள் குழு உலகத்திற்கு பறைசாற்றியிருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

அவர்தம் வீரம், துணிச்சல், தன்னிகரற்ற ஆற்றலை பாராட்டியுள்ள பிரதமர், இது உலக மக்களுக்கு என்றென்றும் உத்வேகமாக திகழும் என்றார்.

சுனிதா வில்லியம்ஸ் தனது பணிக்காலம் முழுவதும் அளப்பறிய ஆற்றலுடன் செயலாற்றியதாக பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

விண்வெளி ஆராய்ச்சி என்பது மனிதசக்திக்கு அப்பாற்பட்டது என்றும் அதுதொடர்பான கனவுகள் நனவாக்க எல்லையற்ற துணிச்சல் தேவை என்றும் எடுத்துரைத்தார்.

**இதனிடையே மத்திய** அமைச்சரவை கூட்டம் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

சுனிதா வில்லியம்ஸ், பட்ச் வில்மோர் ஆகிய இருவருக்கும், 45 நாள் மறுவாழ்வு திட்டம் தொடங்கியுள்ளது.

Space X- ன் டிராகன் விண்கலம் மூலம் Florida Dalhousie கடற்கரையில் இன்று இவ்வீரர்கள் பாதுகாப்பாக தரையிறங்கிய நிலையில், இவர்களின் எடை குறைப்பு பாதிப்புகளை சரிசெய்வதற்கான உடல்தகுதி நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

நடமாட்டம், இலகுதன்மை, தசைவலு என 3 கட்டங்களாக இந்த மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இவ்விருவருக்கும் சிறப்பு பயிற்சிகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖

**சுனிதா – முதலமைச்சர்**

**சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கு** திரும்பிய சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது மீட்பு குழுவினருக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனைத் தெரிவித்த அவர், விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரை பத்திரமாக பூமிக்கு அழைத்து வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**ஜீதேந்திரசிங்**

**நம்நாட்டின் சொந்த விண்வெளி நிலையமான அந்தாரிக்ஷ்** விண்வெளி மையத்தை உருவாக்கும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், வரும் 2040-ம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர் நிலவில் தடம் பதிக்க திட்டமிடப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சந்திரயான் 4 விண்கலம், 5 தொழில்நுட்ப அம்சங்களுடன் 2 செலுத்து வாகனங்கள் மூலம் விண்ணில் ஏவப்படும் என்றார்.

ககன்யான் விண்வெளி வீரர்கள் பொது பார்வையிலிருந்து தனிமை படுத்தப்பட்டிருப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கவன சிதறல்களிலிருந்து பாதுகாக்கவே இந்நடவடிக்கை என்றார்.

பெண் ரோபோ மூலமான ககன்யான் பரிசோதனை பயண திட்டம் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் என்றும் டாக்டர் ஜீதேந்திர சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**நித்தியானந்த ராய்**

**தீவிரவாதத்திற்கு எதிரான எந்த சமரசத்தையும் மத்திய** அரசு மேற்கொள்ளாததால் நாட்டின் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருமளவில் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், தேசிய புலனாய்வு முகமைக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டதால் நாட்டிற்கு வெளியேயும் தீவிரவாத செயல்கள் குறைந்ததாக குறிப்பிட்டார்.

லண்டனில் உள்ள இந்திய தூதரகம் சான்.ஃபிரான்ஸிஸ்கோவில் உள்ள இணை தூதரகம் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் குறித்தும் தேசிய புலனாய்வு முகமை விசாரணை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் தீவிரவாத நடவடிக்கைகளை மத்திய அரசு இரும்புகரம் கொண்டு அகற்றி வருவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**மக்களவை ஆர்ப்பாட்டம்**

**மக்களவை மற்றும் சட்டப்பேரவை தொகுதி** வரையறை தொடர்பான பிரச்சனையில் திமுக, காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக உறுப்பினர் திரு. திருச்சி சிவா, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி வரையறை நடைபெற்றால் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைய நேரிடும் என்றார்.

❖❖❖❖❖❖

**கவன ஈர்ப்பு தீர்மானம்**

நெல்லையில் ஓய்வுபெற்ற காவல்துறை உதவி ஆய்வாளர் கொலை தொடர்பாக இருவர் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

சட்டப்பேரயையில் இன்று இதுதொடர்பான கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்த முதலமைச்சர், இதர குற்றவாளிகள் தனிப்படை மூலம் தேடப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்

குற்றவாளிகள் மற்றும் அதன் பின்னணியில் உள்ளவர்கள் நீதியின்முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது என்றும் முதலமைச்சர் திட்டவட்டமாக கூறினார்.

❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை : கேள்வி நேரம்**

**தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் திடக்கழிவில்** உரம் தயாரித்து விலையின்றி விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் **திரு.கே.என்.நேரு** தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதை தெரிவித்த அவர், மக்கும் குப்பையை உற்பத்தி செய்யும் பரப்பளவு அதிகரிக்கப்படும் என்றார்.

சென்னை மாநகரில் கோடைகாலத்தில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க போதுமான அளவு நீர் இருப்பு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இன்று வெளியான மேலும் சில தகவல்கள்:**

**நியாயவிலை கடைகளில் வழங்கப்படும்** அத்தியாவசிய பொருட்களை வீடுகளுக்கே நேரில் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதாக உணவுத்துறை அமைச்சர் **திரு.சக்கரபாணி** தெரிவித்துள்ளார்.

தேவைப்படும் இடங்களில் நடமாடும் நியாயவிலை கடைகள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

..

**தமிழ்நாட்டில் இந்த ஆண்டு முன்பதிவு செய்துள்ள** விவாசயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும் என்று மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி கூறியுள்ளார்.

இதுவரை 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

..

**தமிழ்நாட்டில் தற்போது 2 ஆயிரத்து 286 ஆரம்ப** சுகாதார நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்தார்.

தமிழகத்தின் ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாக செயல்படுகிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளதாக கூறிய அவர், மேலும் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க அரசு கோரிக்கை வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

**கவனஈர்ப்பு தீர்மானம்**

**கிராமங்கள் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில்** நாய் கடித்து உயிரிழக்கும் கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

பேரவையில் மற்றொரு கவன ஈர்ப்புக்கு இன்று பதிலளித்து பேசியஅவர், நாய்கடித்து உயிரிழக்கும் மாடு ஒன்றுக்கு 37 ஆயிரத்து 500 ரூபாயும், ஆடு ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபாயும், கோழிக்கு 200 ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படும் என்றார்.

இதன்படி இதுவரை உயிரிழந்த ஆயிரத்து 149 கால்நடைகளுக்கு, 42 லட்சத்து 60 ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த பிரச்சனைக்கு பதிலளித்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு நாய்கள் நடமாட்ட பிரச்சனைக்கு சட்டத்திற்கு உட்பட்டே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**பிரதீப்குமார்**

**திருச்சி வி. பெரியபட்டி கிராமத்தில் உங்களை** தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ் கட்டப்படும் கனவு இல்ல வீட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப் குமார் இன்று ஆய்வுசெய்தார்.

அங்குள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளியில் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டட பணிகளையும் அவர் பார்வையிட்டார்.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடைபெறும் தோட்டக்கலை சாகுபடி பணிகளையும்,

பூலான்பட்டி அங்கன்வாடி மையத்தையும் ஆய்வுசெய்தார்.

மதலைபட்டி ஆரம்ப சுகாதார துணை நிலையத்தையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

**தர்மபுரி வாய்ஸ்**

**தர்மபுரி மாவட்டம் அரூர் வரட்டாறு நீர்** தேக்கத்திலிருந்து பழைய புதிய ஆயக்கட்டு பாசனத்திற்காக இன்றுமுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை நெடுந்தீவு கடற்பகுதியில்** எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக கூறி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வர மீனவர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**கால்பந்து**

இந்தியா - மாலத்தீவு இடையிலான சர்வதேச நட்புறவு கால்பந்து போட்டி இன்றிரவு 7 மணிக்கு ஷில்லாங்கில் நடைபெறுகிறது.

வரும் 25-ம் தேதி பங்களாதேஷிற்கு எதிராக நடைபெறவுள்ள ஆசிய கோப்பை தகுதிச்சுற்று போட்டிக்கான பயிற்சி ஆட்டமாக இன்றைய போட்டி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

பிரபல கால்பந்து வீரர் **சுனில் சேத்ரி** சர்வதேச ஓய்விலிருந்து மீண்டும் விளையாட வந்துள்ள நிலையில் இந்த போட்டி முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஸ்பெயினில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் கோப்பை** டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெயினின் லாமஸை இன்று எதிர்கொள்கிறார்.

**ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய** சுற்றில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், பிரசாந்த் இணை இன்று களமிறங்குகிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖